**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093662

1. District : மாவட்டம் திருப்பூர் | PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு | Year: ஆண்டு 2019 | FIR No.: மு.த.அ. எண் 9/2019/AC/TPR | Date: நாள் 26.10.19

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்: 7, 7(A)
(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: 102
(iii) Act சட்டம்: Cr.P.C. — Sections பிரிவுகள்: -
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : -

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 25.10.19 — Date to : நாள் வரை
Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 16.00 மணி முதல் — Time to : நேரம் வரை
(b) Information Received at PS Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 26.10.19 — Time நேரம் 14.00hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD Vol IV — Time நேரம் 14.00hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் — சுமார் 7 km தெற்கு
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள உதவி - ஆணையர் (கலால்) அலுவலகம்,
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் -

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. பேபாலா — (b) ~~Father's~~/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் ராஜமனோகர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 53yrs — (d) Nationality : நாட்டினம் இந்தியன் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -
Date of Issue : வழங்கப்பட்ட நாள் - — Place of Issue : வழங்கப்பட்ட இடம் -
(f) Occupation : தொழில் தனி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் — (g) Address : முகவரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோவை மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
(1) ஜெயராணி, உதவி ஆணையர் (கலால்), திருப்பூர் (2) R. கீர்த்தி, அலுவலக உதவியாளர், (3) S. சண்முகம் P.A. டிரைவர் (4) பொற்செல்வி, ஓய்வு வருவாய் ஆய்வாளர், (5) ராஜ்கிரண்(49) S/o. ராம்நாத், மேலாளர், ஹோட்டல் மணியம் கிளாசிக், திருப்பூர் (6) சௌந்தரபாண்டியன்(31) S/o. காசிமணி, மார்கெட்டிங் மேனேஜர், SAP Residency ஹோட்டல், திருப்பூர். (7) K. ரவிசந்திரன் (42) S/o. காசிவிஸ்வநாதன், மேலாளர், கல்யாண மண்டபம் மற்றும் தென்னை பாயம், திருப்பூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

அந்தத் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………… Rank ………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

(signature) 26/10/19 | R. (signature) 26/10/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
26.10.19

Name: பெயர் R. (name)
Rank: நிலை காவல் ஆய்வாளர், No. எண் ……
உ.ம. 5. க. பிரிவு
திருப்பூர்.

GCP-240-34(Type 2) 90,000 Cps 21 3 16(HCL-12)p 2

**திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 9/2019/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி..**

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 26.10.2019-ம் தேதி 1400 மணிக்கு திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் R.கௌசல்யா ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது கோவை மாவட்ட துணைஆய்வுக்குழு அலுவலர் திருமதி.ஜி. பேபிபாலா அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரின் விபரம் பின் வருமாறு. அனுப்புனர் திருமதி.ஜி.பேபிபாலா, துணை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோவை மாவட்டம். பெறுநர்.காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர் மாவட்டம், திருப்பூர். ந.க.எண்.385/2019 ஜ1 நாள்:26.10.2019 அம்மையீர், பொருள்:திடீர் தணிக்கை – திருப்பூர் உதவி ஆணையர் (கலால்) அலுவலகம், புகார் மனு – நடவடிக்கை கோருதல்-தொடர்பாக. நேற்று (25.10.2019 ம் தேதி) நான் அலுவலக பணியில் இருந்த போது திருப்பூர் உதவி ஆணையர் (கலால்) அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களும், ஊழியர்களும் வருகிற தீபாவளி பண்டிகையை முன்னிட்டு திருப்பூர் மாவட்டத்தில் இயங்கிவரும் பார் உரிமையாளர்களும், ஓட்டல் உரிமையாளர்களும், டாஸ்மாக் கடைக்காரர்களும் லஞ்சமாக பணம் கேட்டதின் அடிப்படையில் கொடுத்து வருவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் நேற்று மாலை 16.00 மணி முதல் 20.00 மணி வரை இவ்வலுவலகத்தை, திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திருமதி.ஆர்.கௌசல்யா மற்றும் பார்ட்டி சகிதம் திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. திடீர் தணிக்கையின் போது திருப்பூர் உதவி ஆணையர் (கலால்) அவர்களுக்கு கொடுக்கவிருந்த பணம் அலுவலக உதவியாளர், டிரைவர், தனிநபர்கள், ராமன் ராம்நாத், சௌந்திரபாண்டியன், ஹரிஹரன் ஆகியோர்களிடமிருந்து பணம் ரூ.1,09,280/- கைப்பற்றப்பட்டது. மேற்படி ஐந்து நபர்களிடமிருந்து தனியாக அழைத்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அப்போது திடீர் தணிக்கை நடவடிக்கை தயார் செய்யப்பட்டது. இம்மாத வருகை பதிவேடு Xerox நகல் ஒப்பம் செய்யப்பட்டு, கைப்பற்றப்பட்டது. டிரைவர் சண்முகத்திடமிருந்த பேப்பர் கைப்பற்றப்பட்டது. இவைகளையும், பணம் ரூ.1,09,280/-ஐயும்

விசாரணைக்காக ஆஜர் செய்கிறேன். நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு ஒப்பம் xxxx ஜி. பேபிபாலா Sir, Received the complaint along with cash Rs.1,09,280/-, documents, proceedings and statements of Tr.Moorthy, Tr.Shanmugam, Tr.Raman Ramnath, Tr.Soundarapandian and Tr.Hariharan on 26.10.2019 at about 14.00 hrs. and registered a case in Tiruppur V&AC Cr.No.09/2019/AC/TPR u/s 7, 7(A), of Prevention of Corruption (Amendment) Act 2018 and 102 Cr.P.C Sd/---- R.Kousalya, Inspr.V&AC, TPR 26.10.2019. 25.10.2019-ம் தேதி மாலை 16.00 மணிக்கு திருப்பூர் உதவி ஆணையர் (கலால்) அலுவலத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட திடீர் தணிக்கை நடவடிக்கையின் விபரம் பின்வருமாறு:- திடீர் தணிக்கை நடவடிக்கைகள் முன்னிலை:1. திருமதி. பேபிபாலா, துணை ஆய்வுக்குழு அலுவலர், கோவை மாவட்டம். 2. திருமதி.R.கௌசல்யா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர். இன்று 25.10.2019-ம் தேதி கோவை, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் ஆகிய நான் பணியில் இருந்தபோது திருப்பூர் மாவட்டம், திருப்பூர் எல்லைக்குட்பட்ட பகுதிகளிலிருக்கும் மதுபான பார் உரிமையாளர்களும், விடுதி உரிமையாளர்களும், டாஸ்மாக் கடைக்காரர்களும் வருகிற தீபாவளி பண்டிகையை முன்னிட்டு திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கிவரும் உதவி ஆணையர் (கலால்), அலுவலக அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும் லஞ்சமாக பணம் கொடுப்பதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் நான், திருப்பூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திருமதி. R.கௌசல்யா மற்றும் பார்ட்டி சகிதத்துடன் திருப்பூர், உதவி ஆணையர் (கலால்) அலுவலகத்தை திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. திடீர் தணிக்கை சகிதம் இன்று 25.10.2019-ம் தேதி மாலை 16.00 மணிக்கு திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முதல் தளத்தில் பின்புறமாக மேற்கு பார்த்தவாறு உள்ள திருப்பூர் மாவட்ட உதவி ஆணையர் (கலால்) அலுவலக எண்.130 எண்ணுள்ள அறைக்குள் நுழைந்தபோது அங்கு பின்னர் பெயர் கேட்டுத்தெரிந்த இளநிலை உதவியாளர் திரு.S.கதிரேசன் மேற்கு பார்த்தவாறு அவருடைய இருக்கையில் அமர்ந்திருந்தார். மேலும் அந்த அறையில் மேலும் ஒரு பெண் அலுவலரும் மூன்று தனிநபர்களும் இருந்தனர். கதிரேசனை தணிக்கை செய்ய அவருடைய பேன்டின் பின்பக்க பாக்கெட்டிலிருந்த பர்சில்

இருந்து பணம் ரூ.1200/-ஐ எடுத்து தானாகவே ஆஜர் செய்தார். அதுகுறித்து கேட்க அவர் தன்னுடைய சொந்தப்பணம் என்று சொன்னதால் அந்தப்பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. இதற்கிடையே இந்த அறைக்கு வடக்கு புறமாக மேற்குபுறமாக இருந்த எண்.129 எண்ணுள்ள உதவி ஆணையர் (கலால்) அறையை பின்னர் தெரிந்த இவ்வலுவலக உதவியாளர் திரு.R.மூர்த்தியும், உதவி ஆணையர் (கலால்) திருமதி. P.ஜெயராணியும் திறந்துகொண்டு உள்ளே சென்றனர். இரண்டு காவலர்களை இந்த 130 அறையிலேயே விட்டுவிட்டு ஜெயராணி அறைக்கு சென்று அவரிடம் நாங்கள் அறிமுகம் செய்துகொள்ள அவர் பதற்றமடைந்தார். பின்னர் அலுவலக உதவியாளர் மூர்த்தியை தணிக்கை செய்ய அவர் தானாகவே தன்னுடைய பேன்டின் வலது பாக்கெட்டிலிருந்து கசங்கிய நிலையிலிருந்த பணம் ரூ.39,630/- ஐ எடுத்து ஆஜர் செய்தார். அவரை விசாரிக்க அவர் இன்று 25.10.2019-ம் தேதி இவ்வலுவலக டிரைவர் திரு.S.சண்முகம் தன்னிடம் செல் எண் 9944400337 என்கிற எண்ணை கொடுத்து இவர் பெயர் ராஜா என்றும், திருப்பூர் பழைய பஸ் ஸ்டேண்டிற்கு வருவார் என்றும் இவர் 9 பார்கடைக்காரர்கள் தீபாவளி மாமூலாக ஜெயராணிக்கு கொடுக்கும் பணத்தை கொடுப்பார் என்றும், அங்கு சென்று வாங்கிவருமாறு சொன்னதாகவும், அதன்படி தானும் பஸ்ஸ்டேண்ட் சென்று பார் உரிமையாளர் ராஜாவிடம் மதியம் சுமார் 3 மணிக்கு மேல் அவர் கொடுத்த மேற்படி பணம் ரூ.39,500/-ஐ வாங்கிக்கொண்டு வந்ததாகவும் அதை ஜெயராணியிடம் சொல்ல அவர் பிறகு வாங்கிக்கொள்கிறேன் என சொன்னதாகவும், அதனால் தான் தன்னுடைய பேண்ட்பாக்கெட்டில் வைத்திருந்ததாகவும் சொன்னார். மீதியுள்ள ரூ.130/- தனது சொந்தப்பணம் என்று சொன்னதால் அவரிடமே அப்பணம் ரூ.130/- திருப்பிக்கொடுக்கப்பட்டது. பணம் ரூ.39,500/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக உதவி ஆணையர் (கலால்) அவர்களை தணிக்கை செய்ய அவர் தானாகவே தன்னுடைய பர்சிலிருந்து பணம் ரூ.4,030/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். இதுபற்றி கேட்க அவர் முன்னுக்குபின் முரணாக பதிலளித்தார். எனவே அப்பணம் ரூ.4,030/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக அங்கு வந்த டிரைவர் S.சண்முகம் என்பவரை தணிக்கை செய்ய அவர் தானாகவே தனது வலதுபக்க பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.32,260/- ஐயும், பெயர் மற்றும் செல் நம்பர்கள் மற்றும் பணம் எழுதப்பட்ட ஒரு ரூல்டு பேப்பரையும் எடுத்து ஆஜர் செய்தார். இதுகுறித்து கேட்க தன்னிடம் ஜெயராணி பார்காரர்களும்,

லாட்ஜ்காரர்களும், ஓட்டல்காரர்களும் தீபாவளிக்காக தனக்கு லஞ்சமாக பணம் கொடுப்பார்கள் எனவும் அதை தன்னையும் மூர்த்தியையும் வாங்கி வைக்கசொன்னதாகவும் தான் அதன்படி ஊத்துக்குளி ரோடு பார்காரரர்கள் பழனி, முருகன், சூப்பர்வைசர் மாசிலாமணி ஆகியோர்களிடமிருந்து ஜெயராணிக்காக கொடுத்த பணம் ரூ.32,000/-த்தை வாங்கி வைத்ததாகவும் மீதி 260/- தனது சொந்தப்பணம் என்றும் கூறினார். எனவே பணம் ரூ.32,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மீதிப்பணம் ரூ.260/- சண்முகத்திடமே திருப்பி கொடுக்கப்பட்டது. இவரிடமும் அலுவலக உதவியாளர் மூர்த்தியிடமும் துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நான் தனியாக வைத்து வாக்குமூலங்கள் பெற்றேன். அடுத்ததாக மீண்டும் உதவி ஆணையர் (கலால்) அலுவலகத்திற்குள் நுழைய அங்கு கதிரேசன் சீட்டிற்கு வடக்கே தெற்கு பார்த்தவாறு இருக்கையில் அமர்ந்திருந்த முதுநிலை வருவாய் ஆய்வாளர் திருமதி.V.பொற்செல்வி என்பவரை தணிக்கை செய்ய அவர் தானாகவே தன்னுடைய பர்சில் இருந்து இருந்து பணம் ரூ.2290/- ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது குறித்து கேட்க முன்னுக்கு பின் முரணாக பதில் அளித்ததால் அந்த பணம் ரூ.2290/-ம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக அங்கிருந்த பின்னர் பெயர் கேட்டு தெரிந்த ஹோட்டல் மணியன் கிளாசிக்கின் ஜெனரல் மேனேஜர் திரு.R.ராமன்ராம்நாத் என்பவரை தணிக்கை செய்ய அவரிடம் பணம் ரூ.14,300/- இருந்தது. இது குறித்து கேட்க அவர் தங்களுடைய மணியன் கிளாசிக் ஹோட்டலின் சார்பாக இவ்வலுவலக அலுவலர்களுக்கு அவர்கள் கேட்டதற்கிணங்க ரூ.14,000/- கொண்டு வந்ததாகவும் மீதி 300/- ரூபாய் தனது சொந்த பணம் என்று சொன்னார்.ரூ.14,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. ரூ.300/- ராமன்ராம்நாத்திடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக இந்த அறையின் வடக்குபுறம் பின்னர் பெயர் கேட்டு தெரிந்த திருப்பூர் வளர்மதி பஸ்ஸ்டாப் அருகில் உள்ள SAP Residency-யின் Bar man திரு.N.சௌந்தரபாண்டியன் என்பவரும் அவருடைய நண்பர் திரு.R.ஜெயகணேஷ் என்பவரும் இருந்தனர். சௌந்தரபாண்டியனை விசாரிக்க அவர் தானாகவே தன்னுடைய பேண்டின் பின்பக்க பாக்கெட்டில் இருந்து பணம் ரூ.2,460/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது பற்றி கேட்க அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் கூறியதால் அந்த பணம் ரூ.2,460/-ம் கைப்பற்றப்பட்டது. ஜெயகணேசை தணிக்கை செய்ய அவரிடம் பணம் எதுவும் இல்லை. அடுத்ததாக இந்த திடீர் தணிக்கை நடந்து கொண்டிருக்கும் போது

பின்னர் பெயர் கேட்டு தெரிந்த திருப்பூர் மாவட்டம் தென்னம்பாளையத்தில் உள்ள பல்லடம் ரெக்ரியேசன் கிளப் மேலாளர் திரு.K.ஹரிஹரன் என்பவர் உள்ளே வந்தார். அவரை விசாரிக்க இவ்வலுவலக அலுவலர்களுக்கு தீபாவளிக்காக மாமூல் பணம் கொடுப்பதற்காக வந்திருப்பதாக சொன்னார். அவரை தணிக்கை செய்ய அவர் தானாகவே தன்னுடைய சட்டையின் இடது பக்க பாக்கெட்டில் இருந்து பணம் ரூ.15,800/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.800/- தன்னுடைய சொந்தப்பணம் என்றும் மீதி ரூ.15,000/- அலுவலக ஊழியர்களுக்கு கொடுப்பதற்காக கொண்டு வந்த பணம் என்று கூறியதால் ரூ.15,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. சொந்த பணம் என்று சொல்லிய ரூ.800/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. வெளிநபர்களான ராமன்ராம்நாத், சௌந்தரபாண்டியன் மற்றும் ஹரிஹரன் ஆகியோர்களிடமும் துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நான் தனித்தனியாக வாக்குமூலம் பெற்றேன். இந்த திடீர் தணிக்கையின் போது விசாரணைக்காக கைப்பற்றப்பட்ட மேலே கூறிய பணம் ரூ.1,09,280/- ஆகும். இந்த அலுவலகத்தினுடைய இம்மாத வருகைப் பதிவேட்டின் ஜெராக்ஸ் நகல் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின் போது பெண் அலுவலர்கள் பெண் காவல் அதிகாரிகளால் தணிக்கை செய்யப்பட்டனர். இந்த திடீர் தணிக்கையின் போது அனைத்து அலுவலர்களும் கண்ணியமாக நடத்தப்பட்டனர். இந்த திடீர் தணிக்கை நடவடிக்கையானது இன்று 25.10.2019-ம் தேதி 16.00 மணிக்கு தொடங்கி 20.00 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த திடீர் தணிக்கை நடவடிக்கை கீழ்க்கண்டோரால் கையொப்பம் இடப்பட்டது. ஒப்பம். xxxx ஜெயராணி, உதவி ஆணையர் (கலால்), திருப்பூர். ஒப்பம்.xxxx மூர்த்தி அலுவலக உதவியாளர்,ஒப்பம் xxxx சண்முகம், ஈப்பு ஓட்டுநர், ஒப்பம் xxxx பொற்செல்வி, முதுநிலை வருவாய் ஆய்வாளர், ஒப்பம் xxxx ராமன் ராம்நாத், ஒப்பம் xxxx சௌந்தரபாண்டியன், ஒப்பம் xxxx ஹரிஹரன், ஒப்பம் xxxx பேபிபாலா, துணை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கோவை மாவட்டம். ஒப்பம் xxxx R.கௌசல்யா,Inspector of Police, V&AC, Tiruppur.

நான் மேற்கண்ட புகாரினையும் திடீர் தணிக்கை செயல்முறை நடவடிக்கைகளையும் மேற்கண்ட திடீர் நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,09,280/-ஐயும், பெயர், செல் நெம்பர் மற்றும் பணம் எழுதப்பட்ட ரூல்டு பேப்பர் ஒன்றும், திரு.மூர்த்தி, திரு.சண்முகம்,

திரு.ராமன்ராம்நாத், திரு.சௌந்தரபாண்டியன், திரு. ஹரிஹரன் ஆகியோர்களிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலங்கள் ஆகியவற்றையும் இன்று 26.10.2019-ம் தேதி சுமார் 14.00 மணிக்கு பெற்று திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் நிலைய குற்ற எண். 09/2019/AC/TPR u/s 7, 7(A) Prevention of Corruption (Amendment) Act 2018 and 102 Cr.P.C-ன் கீழ் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார், திடீர் சோதனை செயல்முறை நடவடிக்கைகள், பணம் ரூ.1,09,280/- பெயர், செல் நெம்பர் மற்றும் பணம் ஆகியவை எழுதப்பட்ட ரூல்டு பேப்பர் ஒன்றும், திரு.மூர்த்தி, திரு.சண்முகம், திரு.ராமன்ராம்நாத், திரு.சௌந்தரபாண்டியன், திரு. ஹரிஹரன் ஆகியோர்களிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலங்கள் ஆகியவற்றையும் இணைத்து கனம் தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருப்பூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. முதல் தகவல் அறிக்கையின் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

R. Ka 26/10/19